2012 ஏப்ரல் 25]
162—

சுற்றுச் சாலை

***923—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தத்தில் சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தத்தில் சுற்றுச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் பேருந்துகளும், பாதசாரிகளும் மற்ற போக்குவரத்து வாகனங்களும், குறுகலான கடை வீதிப் பகுதியிலேயே சென்று வருவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சில நேரங்களில் விபத்துகளும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளைக் கணக்கில் கொண்டு குடியாத்தம் நகருக்குச் சுற்றுச் சாலையோ அல்லது மாற்றுச் சாலையோ அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து*

வசதிக்காக திருவலம், காட்பாடி, வெங்கடகிரி–கோட்டா சாலையில் கிலோ மீட்டர் 41/2—ல் பிரிந்து, காந்தி நகர் மோர்தானா கால்வாயைச் சுற்றி, குடியாத்தம் சாலை கல்லூர் வழியாக மீண்டும் திருவலம், காட்பாடி, வெங்கடகிரி–கோட்டா சாலை கிலோ மீட்டர் 47/4—ல் இணைக்கும் வகையில் புறவழிச் சாலை அமைக்க சாத்தியக் கூறுகளைக் கண்டறிய போக்குவரத்துக் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகின்றது. ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுச் சாலையானது, நகரின் வெளிப் பகுதியில் செல்கிறது. நகரின் மையப் பகுதியில் கவுண்டன்ய மகாநதி என்கிற நதி அமைந்திருக்கிறது. அந்த நதியின் கரை ஓரத்தில் மாற்றுச் சாலை அமைந்தால், நகரத்தின் போக்குவரத்து நெரிசலைப் போக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தின் போக்குவரத்திற்கு சுற்றுச் சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறு தற்போது ஏதும் இல்லையென்றாலும், போக்குவரத்து நெரிசலின் அடிப்படையிலே எதிர்வரும் காலத்திலே, அதை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகராட்சி 50 ஆண்டுக் காலத்திற்கும்*

2012 ஏப்ரல் 25]

மேற்பட்ட ஒரு நகராட்சி. அதிலே சந்தைப்பேட்டை கடை வீதியிலே இப்போதெல்லாம் வாகனங்கள் செல்ல முடியாத அளவிற்கு மிக்க நெரிசல் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் பெங்களூரு போல, கோலார் தங்கவயல் போல, சித்தூரைப் போல, திருப்பதியைப் போல பல முக்கிய நகரங்களுக்கு அந்த வழியாகத்தான் பல பேருந்துகளும், பல மகிழுந்துகளும் போய்க்கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கிலே அங்கே சந்தடி ஏற்படுகிறது, தடை ஏற்படுகிறது. ஆகவே, அதைப் போக்குகிற வகையிலே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் காந்தி நகர், சித்தூர் சாலை வழியாக ஒரு புறவழிச் சாலையை ஏற்படுத்துவதற்கு உண்டான ஆய்வு பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விரைந்து நடப்பாண்டிலேயே செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் நகரத்தில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைப்பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது போக்குவரத்து நெரிசலினுடைய கணக்கெடுப்பை அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுவரை துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு இல்லாமல் இருந்த நிலையில், திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்களுக்கு இப்போது துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது.*

திரு. என்.எஸ்.என். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க, முழு மூச்சாக உழைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தொழில் நகரமான காங்கேயத்தைச் சுற்றியுள்ள 7 சாலைகளை*

இணைத்தும், அதேபோல, வெள்ளக்கோவில் நகரத்தைச் சுற்றியுள்ள 5 சாலைகளை இணைத்தும் இணைப்புச் சாலை, அதாவது Ring Road அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்து நெரிசல் இருப்பின், வருங்காலத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரம் மிகவும் குறுகலான சாலை வசதி கொண்ட நகரமாகும். அந்த நகரத்திற்குப் புறவழிச் சாலை அனுமதிக்கப்பட்டு, நிலமும் கையகப்படுத்தப்பட்டது. பணிகள் தொடங்கிய காலத்தில், அங்கே கோயில் நிருவாக அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த விலையைக் காட்டிலும் கூடுதலாகக் கேட்டதால், தொடங்கிய பணிகள் இப்போது தடைப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொதுமக்கள் நலன் கருதி, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டியிலே புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தற்போது தடைப்பட்டிருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அரசு அதற்கு உண்டான நடவடிக்கை எடுத்து, விரைவாக புறவழிச்

2012 ஏப்ரல் 25]

சாலை அமைக்கின்ற பணியை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கள்ளக்குறிச்சிப் பகுதியிலே கச்சிராப்பாளையம் சாலையில் ஓர் அரசு சர்க்கரை ஆலை உள்ளது. அத்துடன் தியாகதுருகம் சாலையில் ஒரு தனியார் சர்க்கரை ஆலை உள்ளது. கரும்பு லோடுகள் கள்ளக்குறிச்சி நகரத்தின் வழியாகத்தான் செல்கின்றன. அங்கே தனியார் பள்ளிகள், கல்லூரிகள் இருக்கின்றன. அந்த வாகனங்களும் அங்கே செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, கள்ளக்குறிச்சி நகரைச் சுற்றி ஒரு Ring Road அமைத்துக்கொடுத்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது கள்ளக்குறிச்சிக்கு உள்ளே செல்லாமல் புறவழிச் சாலை வேண்டும். இதுதானே உங்கள் கேள்வி? மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரத்திலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகவும், அந்தப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவும் புறவழிச் சாலை வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இதை ஆய்வு செய்து, நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில், தேனி நகரம் மாவட்டத்

[2012 ஏப்ரல் 25

தலைநகரமாக இருப்பதனால் அதிகமான போக்குவரத்து நெருக்கடி இருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதற்கு ஒரு சுற்றுச் சாலை ஏற்படுத்தி, பணிகள் துவங்கி, முக்கால்வாசிப் பணிகள் முடிந்தவுடன் அப்பணிகள் நின்றுவிட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தப் பணிகள் நடைபெறவில்லை. அந்தப் பணியை நிறைவு செய்து கொடுப்பதன் மூலமாக மாவட்டத் தலைநகரத்தில் இருக்கும் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க வாய்ப்பு ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியைத் துரிதமாக நடத்த ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணி காலதாமதமாக நடைபெற்று வருவதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பணிகள் விரைவாக நடைபெறுவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில், பெரம்பலூர் சாலையுடன் துறையூர்—ஆத்தூர் சாலையை இணைத்து சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலை அமைத்து, துறையூர் நகரில் கனரக வாகன நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு Ring Road அமைத்துக் கொடுக்கவும், துறையூர் பேருந்து நிலையத்திலிருந்து முசிறி பிரிவு ரோடு வரை நான்குவழிச் சாலை அமைத்துக் கொடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் பகுதியில் புறவழிச் சாலை வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அரசு அங்கிருக்கின்ற போக்குவரத்து நெரிசலை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், அது அறிவிக்கப்பட்டுவிட்டது. நிருவாக வசதியின் அடிப்படையில் அப்பணி மேற்கொள்ளப்படும். எனவே, இந்த வினா அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். வளர்ந்துவரும் பெருநகரமாக இருக்கும் அறந்தாங்கியில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சுற்றுச் சாலை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்த நகரத்திலே போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக இங்கே குறிப்பிடுகின்றார்கள். எல்லா நகரங்களிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் பெரும்பாலானோர் புறவழிச் சாலை அல்லது வெளிவட்டச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எல்லா சாலைகளையுமே*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அமைக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் விருப்பம். ஆனால், இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்துதான் வெளிவட்டச் சாலையோ, சுற்றுச் சாலைகளையோ அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறந்தாங்கியிலே புறவழிச் சாலை வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில் அதை அரசு ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும்பட்சத்தில், அந்த அறிக்கையைப் பெற்று அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திற்கும் நாமக்கல் மாவட்டத்திற்கும் இடையில் காவிரி ஆற்றிலே ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்திலிருந்து பெருந்துறைக்குச் செல்கின்ற மெயின் ரோடை மாநிலச் சாலையாக மாற்றினால் 40 கிலோ மீட்டர் சுற்றிச் செல்வதால் ஏற்படும் டீசல் செலவு மீதமாகும். கோயம்புத்தூரிலிருந்து வருகின்ற லாரிகளெல்லாம் நாமக்கல் மாவட்டத்திலுள்ள அவல்பூந்துறை, மொடக்குறிச்சி மற்றும் பாசூர் வழியாக நாமக்கல்லிற்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அதை மாநிலச் சாலையாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி பகுதியிலே ஒரு புதிய புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார். அதன்மூலமாக 40 கிலோ மீட்டர் தூரம் குறையும் என்ற ஒரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இதை அரசு ஆய்வு செய்து, அந்த ஆய்வு அறிக்கையை பெற்ற பிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2012 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கமுதி—சாயல்குடி சாலையில், கமுதியினுடைய மையப் பகுதியிலே கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் குறுகிய சாலையில் செல்ல வேண்டியிருப்பதால், அங்கு வாகன நெரிசல் அதிகமாக ஏற்படுகிற காரணத்தினால் கமுதி—சாயல்குடி சாலையில் ஒரு சுற்று வட்டச் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கமுதி பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, அந்தப் பகுதியை அரசு ஆய்வு செய்து, அங்குள்ள போக்குவரத்து நெரிசலைக் கணக்கெடுத்து, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின் அந்தச் சாலையை அகலப்படுத்துவது மட்டுமல்லாமல்—அங்கே ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: *பொற்காலத்தின் முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் மலர்ப் பாதம் வணங்குகிறேன். பெரம்பலூர் நகரம், பெரம்பலூர் மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கிறது; அது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற பகுதியாக இருப்பதனால், தேசிய நெடுஞ்சாலையையும், துறையூர் சாலையையும் இணைக்கின்ற வகையில் புறவழிச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றேன். எல்லா நகரங்களிலுமே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் புறவழிச் சாலை அமைக்க கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்தத் துறையினுடைய நிதி நிலைமைக்கு ஏற்பத்தான் புறவழிச் சாலைப் பணியை அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரம்பலூர் பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது, அங்கே ஒரு புறவழிச் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மாவினுடைய அனுமதி பெற்று அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் பேரூராட்சியில் அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள காரணத்தினால் அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணி எந்த அளவில் உள்ளது என்பது தெரியவில்லை. அந்த மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, புறவழிச் சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் எடுக்கின்ற பணியைப்பற்றி இங்கு கேட்டிருக்கின்றார்கள். புறவழிச் சாலை அமைக்கின்றபொழுது நிலம் கையகப்படுத்துவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருப்பதைப்பற்றி*

2012 ஏப்ரல் 25]

ஏற்கெனவே நான் இங்கே அவையிலே தெரிவித்திருக்கின்றேன். எனவே, அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு அந்தப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இந்தப் புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகிறபொழுது மழைக் காலங்களிலே வெள்ள நீர் வடிவதற்கான வடிகால் ஏற்பாடுகள் செய்யப்படுவதில்லை. சிதம்பரத்திலே அமைக்கப்பட்டிருக்கிற புறவழிச் சாலையில் இவ்வாறு வடிகால் வசதி செய்யப்படாத காரணத்தினால் வெள்ளக் காலத்திலே பெருத்த சேதம் ஏற்படுகிறது. அங்கே வடிகால் வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அமைக்கப்பட்ட புறவழிச் சாலைகளில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு புறவழிச் சாலை அமைக்கின்றபொழுது அது முழுமையாகப் பயன் தருகின்ற விதத்திலே அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க—ஏற்கெனவே அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்ற அந்த ஆணைக்கிணங்க, புறவழிச் சாலைகள் அமைக்கின்றபொழுது வடிகால் வசதியுடன்தான் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*